# <u>In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.</u>

O.S.No.79/2022 தேதி- 29.04.2026
(PW.1) – அஜிதா

**<u>1 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-</u>**

1.நான் இந்த வழக்கில் கட்சியாக இல்லை என்றால் சரிதான். என் கணவருக்கு இவ்வழக்கின் விவரங்கள் பற்றி எதுவும் தெரியாததால் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கின் வாதியான என் கணவரின் தாயார் மற்றும் தந்தையின் பெயர் என்ன என்றால் ரெஞ்சிதம் மற்றும் செல்வராஜ் ஆகும். எனக்கும் இந்த வழக்கின் வாதியான செல்வகுமாருக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 2011 ல் திருமணம் நடைபெற்றது.

2. 2011 ஆம் ஆண்டிற்கு முன்பு உள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், என் கணவர் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். ரெஞ்சிதத்திற்கும், செல்வராஜிக்குமான வாரிசுகளின் பெயர்கள் என்ன என்றால் செல்வஃப்ளாரன்ஸ், செல்வகுமார், செல்வராணி, செல்வகுமாரி ஆகியோர்கள் ஆவார்கள். செல்வராஜின் தந்தை மற்றும் தாயாரின் பெயர் என்ன என்றால் தாயார் பெயர் செல்வப்பூ ஆகும், தந்தையின் பெயர் நினைவில் இல்லை. தந்தையின் பெயர் வேலாயுத நாடார் என்றால் சரிதான்.

3. செல்வப்பூவிற்கும், வேலாயுத நாடாருக்கும் எத்தனை வாரிசுகள் உண்டு என்றால் 13 பேர் உண்டு தற்போது 6 பேர் உயிரோடு இருந்தார்கள், தற்போது ஒரு நபர் மட்டும் உயிரோடு இருக்கிறார். அந்த ஆறு நபர்களின் பெயர்கள் என்ன என்றால் செல்வராஜ், தாய், கமலாட்சி, முத்துக்குட்டி, மற்றவர்கள் பெயர்கள் நினைவில் இல்லை. மேற்சொன்ன செல்வப்பூவிற்கும், வேலாயுத நாடாருக்கு முத்துக்குட்டி, செல்வராஜ், பொன்னுபிள்ளை, பாலம்மாள், தாய் மற்றும் கமலாட்சி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான்.

4. தற்போது உயிரோடு இருக்கும் வேலாயுத நாடார் மற்றும் செல்வப்பூவின் வாரிசுகள் என் கணவருக்கு எதிராக ஒரு பாதை வழக்கு இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். செல்வப்பூவும், வேலாயுத நாடாரும் எந்த

ஊரில் வசித்து வந்தார்கள் என்றால் தெரியாது. செல்வப்பூவும், வேலாயுத நாடாரும் முளகுமூடு பகுதியில் உள்ள தச்சக்கோடு, கோவில் விளை என்ற ஊரில் வசித்து வந்தார்கள் என்றால் முளகுமூடு பகுதியில் வசித்து வந்தார்கள், குறிப்பிட்டு சொல்ல இயலவில்லை. செல்வப்பூவும், வேலாயுத நாடாரும் எந்த முகவரியில் வசித்தார்கள், எங்கு இறந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5. தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படுவது வேலாயுதநாடாரின் இறப்பு சான்றிதழ் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வேலாயுத நாடார் 24.04.1992 ஆம் தேதியில் இறந்தார் என்றால் 1992 ல் இறந்தார் என்று தெரியும், ஆனால் தேதி நினைவில் இல்லை. தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படும் இறப்பு சான்றிதழில் 1992 தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன இறப்பு சான்றிதழிலும் முளகுமூடு, தச்சக்கோடு, கோவில்விளை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் முகவரி வேறாகும்.

6. தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படும் இறப்பு சான்றிதழில் இறந்த நபரின் நிலையான வீட்டு முகவரியிலும் முளகுமூடு, தச்சக்கோடு, கோவில்விளை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த முகவரியா என்று எனக்கு தெரியாது. வாதியின் பாட்டி செல்வப்பூவும் முளகுமூடு, தச்சக்கோடு, கோவில்விளை என்ற முகவரியில் தான் வசித்து, வாழ்ந்து இறந்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படுவது செல்வப்பூவின் இறப்பு சான்றிதழில் வசித்த இடம், நிலையான முகவரி மற்றும் இறந்த இடம் ஆகியவற்றில் முளகுமூடு, தச்சக்கோடு, கோவில்விளை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். செல்வப்பூவின் இறப்பு சான்றிதழில் 07.06.1982 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

7. இறப்பு சான்றிதழில் செல்வப்பூ இறக்கும் போது அவருடைய வயது 58 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் எங்களிடம் வேறு இறப்பு சான்றிதழ் உள்ளது, அதில் 1978 ல் இறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனது கணவரின் செல்வகுமாரி மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றால் இல்லை, மக்கள் கூட்டமாக இருந்தால் வலிப்பு நோய் ஏற்படும். செல்வகுமாரிக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால்

தெரியாது. செல்வகுமாரி மனநலம் பாதிக்கப்பட்டவர் என்ற காரணத்தினாலும், அவருக்கு எழுத, படிக்க தெரியாததை பயன்படுத்திக் கொண்டு அவருக்கு பாகம் எதுவும் வழங்காமல் ஏற்படுத்தப்பட்ட ஆவணமானது வா.சா.ஆ.1 என்றால் சரியல்ல.

8. என் கணவர் இந்த வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கின் 1வது பிரதிவாதியான முத்துக்குட்டி இதே வழக்கு பட்டிகை சர்வே எண்ணில் 12 சென்ட் சொத்தை பாகம் வைக்க கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணமானது என் கணவர் பெயருக்கு என் கணவரின் தாயார் மற்றும் சகோதிரிகள் எழுதிக் கொடுத்த விடுதலை பத்திரம் என்றால் சரிதான்.

9. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்து எவ்வாறு உரிமைப்பட்டது என்பதை காண்பிக்க வா.சா.ஆ.1 ஆவணத்தின் 5வது பக்கத்தில் குளத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தின் வழியாக 1978 ஆம் ஆண்டு 1956 ஆம் கிரய ஆவணத்தின் படி உரிமைப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன ஆவணத்தின் படி என் மாமனார் செல்வராஜிற்கு சொத்து உரிமைப்பட்டது என்றும், அதன் அடிப்படையில் தான் வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றும் சங்கதிகளை கூறி எதிர்கோரிக்கை மனுவில் எதிரூரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

10. இந்த வழக்கில் வழக்கு பட்டிகை சொத்து என் கணவருக்கு எப்படி கிடைத்தது என்றோ, என் மாமனாருக்கு எப்படி கிடைத்தது என்றோ எந்த முன் ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மாமனாருக்கு கிடைத்ததாக சொல்லப்படும் சொத்தின் ஆவணம் தான் தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படும் மலையாளம் மற்றும் அதன் தமிழாக்கம் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

11. என் மாமனாருக்கு விலைக்கு வாங்கியதாக சொல்லப்படும் 1956 கிரய ஆவணத்தில் செல்வராஜ் மற்றும் செல்வப்பூ ஆகிய இரு பெயருக்கு சேர்ந்து வாங்கிய கிரய ஆவணம் என்றால் சரியல்ல, என் மாமனார் மட்டும் விலைக்கு வாங்கியதாக

தான் தெரியும். அந்த அசல் ஆவணத்தின் தமிழாக்கத்தில் 51 வயதுள்ள செல்வப்பூவும், மகன் மேற்படியின் வேலாயுத நாடாரின் மகன் 23 வயதுள்ள செல்வராஜ் பெயருக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட கிரய ஆவணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

12. என் கணவர் தரப்பில் தாக்கல்செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் என் மாமனார் செல்வராஜிக்கும் மட்டும் தனியாக விலைக்கு வாங்கியதாக பொய்யாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மொத்தம் 12 சென்ட் சொத்தில் என் கணவருக்கு எத்தனை ஆவணங்கள் மூலம் என் கணவருக்கு பாத்தியப்பட்டது என்பதை சொல்ல முடியுமா என்றால் 8 சென்ட் சொத்து மற்றும் 4 சென்ட் சொத்து என்று இரண்டு ஆவணங்கள் மூலம் கிடைக்கப்பெற்றது.

13. இந்த வழக்கில் எத்தனை சென்ட் சொத்திற்கு பரிகாரம் கேட்டுள்ளோம் என்றால் 8 சென்ட் சொத்திற்கு மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். 4 சென்ட் சொத்தை குறித்து எந்த பரிகாரம் கேட்கவில்லை என்றால் ரெஞ்சிதம் மற்றும் செல்வகுமாரி ஆகியோர்களின் காலத்திற்கு பிறகு தான் எங்கள் கைவசம் கிடைக்கும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் யார் யாருக்கு உரிமைப்பட்டது என்றும், என் கணவருக்கு மட்டும் உரிமைப்பட்டதா என்பதை காண்பிப்பதற்கு எந்த ஒரு பட்டாவும் இணைக்கப்படவில்லை என்றால் ரெஞ்சிதம் பெயரில் கரத்தீர்வை ரசீது இணைக்கபட்டுள்ளது.

14. கரத்தீர்வை ரசீதில் விகிதம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது, பாகம் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சொத்தானது செல்வப்பூ மற்றும் செல்வராஜிற்கு சேர்ந்து உரிமைப்பட்ட சொத்து என்பதால் தான் இந்த வழக்கில் பட்டா எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. செல்வப்பூவிற்கு உள்ள பாகத்தை மறைக்க வேண்டும் என்பதால் தான் போலியாக தயார் செய்யப்பட்ட வா.சா.ஆ.1 ஆவணத்தில் பட்டா எதுவும் இணைக்கப்படவில்லை என்றால் சரியல்ல, ரெஞ்சிதம் பெயரில் பட்டா உள்ளது.

15. மேற்சொன்னவாறு நான் இவ்வழக்கில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணமானது செல்வகுமாரியை

ஏமாற்றி அவருக்கு கொடுக்க வேண்டிய பாகத்தை கொடுக்காமல், அவருடைய கைரேகையை பதிவு செய்து போலியாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. மொத்தம் 12 சொத்தில் தான் செல்வப்பூ மற்றும் வேலாயுத நாடாரின் கல்லறை உள்ளது என்றால் மொத்தம் 4 நபர்கள் இறந்துவிட்டார்கள், ஆனால் மூன்று நபர்களின் கல்லறை தான் உள்ளது, அதனால் யாருடைய கல்லறை என்று சொல்ல முடியாது.

16. 12 சென்ட் சொத்தில் தான் வேலாயுத நாடார் மற்றும் செல்வப்பூவின் கல்லறை உள்ளது என்றாலும், நான் தெரிந்தே வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.5 ஆவணமானது செல்வப்பூவின் இறப்பு சான்றிதழ் என்றால் சரிதான். செல்வப்பூவின் இறப்பு சான்றிதழ் எங்கிருந்து பெறப்பட்டது என்றால் வேர்கிளம்பி சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பெறப்பட்டது.

17. எங்கள் பகுதிக்கான பிறப்பு மற்றும் இறப்பு பதிவு அலுவலகம் எங்குள்ளது என்றால் வேர்கிளம்பியில் உள்ளது. பிறப்பு மற்றும் இறப்பு பதிவு அலுவலகம், திருவிதாங்கோடு என்றால் இல்லை, வேர்கிளம்பியில் தான் உள்ளது. வா.சா.ஆ.5 ஆவணமானது எப்போது பெறப்பட்டது என்றால் இந்த வழக்கிற்கு தேவைப்பட்டதால் பெறப்பட்டது. வா.சா.ஆ.5 ஆவணமானது எப்போது பெறப்பட்டது என்றால் வழக்கு தொடங்கப்பட்ட பிறகு பெறப்பட்டது.

18. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் வேர்கிளம்பி, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் எப்போது பதிவு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது, இறப்பு சான்றிதழை மட்டும் வழக்கை தாக்கல் செய்த பிறகு வாங்கினேன். நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. செல்வப்பூ மற்றும் வேலாயுத நாடார் முகவரி மற்றும் பிறப்பு மற்றும் இறப்பு அலுவலகம், பூந்தோப்பு என்ற பகுதிக்கு உட்பட்டு வராது என்றால் சரியல்ல, அந்த பகுதிக்கு உட்பட்டு தான் வரும்.

19. இதற்கு முன்பு நான் வேர்கிளம்பி, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு அலுவலகத்திற்கு உட்பட்டு வரும் என்று சொல்லிவிட்டு, தற்போது பூந்தோப்பு

பகுதிக்கு உட்பட்டு வரும் என்று முன்னுக்கு பின் முரணாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல, முன்னால் பூந்தோப்பு என்ற பகுதியில் தான் வரும். மேற்சொன்னவாறு அப்போது நடைமுறையில் இருந்திருந்தால் பூந்தோப்பு பகுதிக்கு உட்பட்ட பிறப்பு மற்றும் இறப்பு பதிவு அலுவலகத்தில் தான் பதிவு செய்யப்பட்டு இருக்கும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

20. மேற்சொன்னவாறு பூந்தோப்பு பகுதிக்கு உட்பட்ட பிறப்பு மற்றும் இறப்பு பதிவு அலுவலகத்தில் பதிவு செய்திருந்தால், அதை ஆவணமாக பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் முடியும். செல்வப்பூ மற்றும் வேலாயுத நாடார் எந்த இடத்தில் வைத்து இறந்தார்கள் என்றால் வேலாயுத நாடார் பயோனியர் தெரு, பொற்றவிளை என்ற இடத்தில் வைத்து இறந்தார். அவருடைய மனைவி செல்வப்பூ மேற்சொன்ன அதே பகுதியில் தான் இறந்தாரா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

21. பயோனியர் தெரு, பொற்ற விளை என்ற இடம் முளகுமூடு பகுதிக்கு உட்பட்டு தான் வரும் என்றால் சரிதான். தச்சக்கோடு முளகுமூடு பகுதிக்கு உட்பட்டு தான் வரும் என்றால் தெரியாது. வா.சா.ஆ.5 ஆவணமான செல்வப்பூ இறப்பு சான்றிதழில் அவர் எந்த பகுதியில் வசித்து வந்தார் என்றும், எங்கு வைத்து இறந்தார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பந்தகாரவிளை, பூந்தோப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

22. பந்தக்காரவிளை, பூந்தோப்பு என்று சொல்லியுள்ள நிலையில் வீட்டின் எண் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.5 ஆவணத்தில் பந்தல்விளை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பந்தல்விளை தவிர வேறு எந்த குறிப்பும் வா.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பந்தல் விளை எங்கு உள்ளது என்றால் தெரியாது. மேற்சொன்ன பந்தல்விளை என்ற இடம் இருப்பதை காண்பிப்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

23. எந்த ஒரு விவரமும் குறிப்பிடப்படாமல் போலியாக அரசு அதிகாரிகளை சுவாதீனப்படுத்தி வாங்கப்பட்ட போலியான வா.சா.ஆ.5 ஆவணம் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.1 அதனை சார்ந்த மற்றொரு 4 செண்ட்டிற்கான ஆவணமும் மாவட்ட பதிவாளர், மார்த்தாண்டம் அலுவலகத்தில் ரத்து செய்ய கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு, இரு தரப்பினரையும் விசாரித்து ஆவணம் போலியான ஆவணம் என்று தெரியவந்தால் மேற்சொன்ன இரண்டு ஆவணங்களை ரத்து செய்தார்கள் என்றால் சரியல்ல, எங்களிடம் விசாரணை செய்யப்படவில்லை, அந்த உத்தரவை எதிர்த்து மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரைகிளையில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளோம்.

24. நாங்கள் விசாரணைக்கு ஆஜரானோம் என்றாலும், தற்போது இந்த வழக்கில் தாக்கல் செய்த வா.சா.ஆ.5 ஆவணத்தை விசாரணையின் போது செல்வப்பூ 10.01.1978 ஆம் வருடம் இறந்ததாக காண்பிக்க வா.சா.ஆ.5 ஆவணத்தை காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. பதிவாளர் பிறப்பித்த உத்தரவில் சம்மந்தப்பட்ட சார் பதிவாளர் அலுவலர் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்க பரிசீலனை செய்யப்பட்டது என்றால் அதை பற்றி தெரியாது.

25. போலியாக இரண்டு ஆவணங்களை தயார் செய்து, அரசு அதிகாரிகளை சுவாதீனப்படுத்தி வா.சா.ஆ.5 ஆவணத்தை குறிப்பிட்டு, முத்துக்குட்டி மற்றும் அவருடைய சகோதரர்களுக்கு சொத்தை கொடுக்கக்கூடாது என்ற காரணத்திற்காக இந்த போலி இறப்பு சான்றிதழ் தயார் செய்து உண்மையை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே செல்வப்பூ என்பவர் 07.06.1982 ஆம் வருடம் தச்சக்கோடு, கோவில்விளை முளகுமூடு என்ற முகவரியில் வைத்து தான் காலமானார் என்றால் சரியல்ல. அவருடைய இறப்பு பிறப்பு மற்றும் இறப்பு பதிவு அலுவலகம், திருவிதாங்கோட்டில் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும், அதை மறைத்து 1978 ஆம் வருடம் அவர் இறந்ததாக போலியான இறப்பு சான்றிதழை பெற்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

26. இந்த வழக்கின் 1வது பிரதிவாதியான முத்துக்குட்டி மற்றும் அவருடைய சகோதரர்களுக்கு, அவரின் தாயாரான செல்வப்பூவின் சொத்தில் சமஉரிமை பெற கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. நான் வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.